# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

C

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

பகுதி - I

குறிப்புகள் : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15x1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. தமிழ்விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. பொருத்தமான விடையைத் தேர்க.
அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்
ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
க) அ, இ உ) ஆ, இ ங) அ, ஆ ச) அ, ஆ, இ

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

4. பொருந்தாத இணை எது?
அ) எருதுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத்திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

6. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
- இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

7. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

8. மரவேர் என்பது ________ புணர்ச்சி.
அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

9. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி ________.
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

10. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்டச் சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

11. தீரா இடும்பைத் தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

பாடலைப் படித்து பின் வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல் அன்ன
நாடெல்லாம் நீர் நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

www.Padasalai.Net www.CBSEtips.in



12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ________.
அ) தமிழ்விடுதூது ஆ) புறநானூறு இ) பெரியபுராணம் ஈ) நாலடியார்
13. இப்பாடலை இயற்றியவர் ________.
அ) குடபுலவியனார் ஆ) சேக்கிழார் இ) கவிஞர் தமிழொளி ஈ) சமண முனிவர்கள்
14. 'கழை' என்பதன் பொருள் ________.
அ) சோலை ஆ) பக்கம் இ) கரும்பு ஈ) சிறு கிளை
15. 'கருங்குவளை' என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை
இ) உம்மைத் தொகை ஈ) உவமைத் தொகை

## பகுதி - II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8**
**(வினா எண் 21 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

16. கூவல் என்று அழைக்கப்படுவது எது?
17. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் என்பனவாகும்.
ஆ) இந்தியாவில் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.
18. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
19. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
20. நிலம்போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
21. 'ஒஓதல்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5x2=10**

22. வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.
23. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகைகளைச் சுட்டுக.
24. ஒரே சொல்லால் தொடரின் இரு இடங்களையும் நிரப்புக.
எண்ணெய் ஊற்றி ________ விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு ________.
25. இடைச்சொற்களைப் பயன்படுத்தி கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.
அ) வீட்டுக்குச் செல்லத் தான் இவ்வளவு பீடிகையா?
ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.
26. கலைச்சொற்கள் தருக.
அ) Saline soil ஆ) Social Reformer
27. மாறுபாடுள்ள குழுவினைக் கண்டறிக.
கடி, உறு, கூர், கழி
28. பொருள் எழுதுக :
அ) தாமம் ஆ) பொறி

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2x3=6**

29. முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் - இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



30. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறவொழுக்கங்களும் அமைந்திருக்கும். நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர். திருந்திய மக்களை மற்ற உயிர்களினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

1. மக்களை மற்ற உயிர்களினின்றும் பிரித்துக் காட்டுவது எது?
2. எதனால் பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்?
3. மொழி எதனை அளந்தறிவதற்குச் சிறந்த வழியாக உள்ளது?

31. ஏறுதழுவுதல், திணை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

**(வினா எண் 34க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்)**

32. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக :
ஒன்றறிவதுவே எனத்தொடங்கும் தொல்காப்பியரின் பாடல் *(அல்லது)*
"நீரின்று அமையா" எனத் தொடங்கும் புறநானூறு பாடல் எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

36. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக்காட்டுக.

37. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5x5=25

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

39. அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்ட கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

*(அல்லது)*

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

40. அ) நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன் - *கவிமணி*


*(அல்லது)*

ஆ) பொன்மொழிகளை மொழி பெயர்க்க.

1. Every flower is a soul blossoming in nature. - Gerad De Nerval
2. An early morning walk is a blessing for the whole day. - Henry David Thoreau
3. A nation's culture resides in the hearts and in the soul of its people. - Mahatma Gandhi
4. The art of people is a true mirror to their Minds. - Jawaharlal Nehru
5. You have to dream before your dreams can come true . - A.P.J.Abdul Kalam

41. உங்கள் பெற்றோர் மகிழ்ச்சியடைய நீங்கள் செய்ய வேண்டிய செயல்களை வரிசைப்படுத்துக.

42. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3 x 8 = 24

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வுக்கு தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

*(அல்லது)*

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாக தொகுத்து எழுதுக.

44. அ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

45. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593